மலர்.4 இதழ்.3 ஜனவரி 2020

P-ISSN : 2454-3993 E- ISSN : 2582-2810 காலாண்டிதழ்

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

(UGC - CARE பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்விதழ்)




# Shanlax International Journal of Tamil Research

A Peer-reviewed-Scholarly Indexed Quarterly Journal

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

SHANLAX INTERNATIONAL JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

மலர்.4 இதழ்.3 ஜனவரி 2020 காலாண்டிதழ்

P- ISSN: 2454-3993 E- ISSN: 2582-2810 Impact Factor: 3.085

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

(UGC - CARE பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்விதழ்)

## Shanlax International Journal of Tamil Research

A Peer-reviewed-Scholarly Indexed Quarterly Journal

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
66, வி.பி. வணிக வளாகம்
T.P.K. பிரதான சாலை, வசந்த நகர்
மதுரை - 625 003
தமிழ்நாடு - இந்தியா
மின்னஞ்சல்: editor@shanlaxjournals.com
வலைமுகவரி: www.shanlaxjournals.com
தொடர்புக்கு: 9043303383

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்


முதன்மை ஆசிரியர்

ந. முருகேசபாண்டியன்
விமர்சகர்
மதுரை
9443861238

ஆலோசனைக் குழு

முனைவர் பா. ஆனந்தகுமார்
தமிழ்த்துறை
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

முனைவர் இரா. காமராசு
நாட்டுபுறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் உ. அலிபாவா
தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

ஆசிரியர் குழு

முனைவர் பா. இரவிக்குமார்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியல் புலம்,
பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

முனைவர் மு. பாண்டி
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

முனைவர். நா. சுலோசனா
தமிழ் மொழி & மொழியியல் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

முனைவர் கி. பார்த்திபராஜா
தமிழ்த்துறை
தூய நெஞ்சகக் கல்லூரி
திருப்பத்தூர்

முனைவர் மா. கருணாகரன்
தமிழ்த்துறை
அன்னை பாத்திமா கலை அறிவியல் கல்லூரி
திருமங்கலம்

முனைவர் ந. இரத்தினக்குமார்
தமிழ்த்துறை
மதுரைக் கல்லூரி
மதுரை

முனைவர் கல்பனாசேக்கிழார்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

முனைவர் கி.சங்கரநாராயணன்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப் பலகைத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்

முனைவர் பொன். சசிகுமார்
ஆசிய பண்பாடு மற்றும் மொழிப்புலம்
நான்யாங் தொழில்நுட்பவியல்
சிங்கப்பூர் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

முனைவர் பாரதி சங்கரராஜுலு
விரிவுரையாளர் – தமிழ் & தெலுங்கு
தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய ஆய்வுகள் துறை
கலிஃபோர்னியா பல்கலைக்கழகம்
பெர்க்லி, (CA) அமெரிக்கா

நாகரத்னம் சுதர்ஷினி
விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா
ஸ்ரீலங்கா

டாக்டர். மணிவண்ணன் முருகேசன்
தலைவர், தமிழ்மொழி மற்றும் இலக்கியத் திட்டம்
மனிதவியல் மற்றும் நடத்தை அறிவியல் பள்ளி
சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்



சந்தா விவரம்

ஆண்டு சந்தா: ரூ. 2000/-

11. இஸ்லாமியர்தம் உணவுத்தூய்மை மரபியல் நெறி 66
கை. பல்கீஸ் அன்பியா

12. சமூகத்துக்கிறுவன படைப்புகள் போதனைகளும் நெறிமுறைகளும் 69
வினோதினி அறிவழகன்

13. கானியும் புறநானூறும் 74
முனைவர் ஆ. முத்துக்குட்டி

14. கலைஞரின் கடிதங்களும் திருக்குறளும் 78
த. இளங்கோ இருதயராஜ்

15. கைகேயி மறுத்த மடைப்பும் கருத்துருவாக்கமும் 82
முனைவர் மு. சுதா

16. புதிய இலக்கியமும் சிலப்பதிகாரமும் 86
ரா. மாலா

17. ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணையில் உள்ளுறை உவமம் 92
ஏ. கோமதி

18. ஆடிப்பாவை போல - அகப்புற அரசியல் 96
முனைவர் ஆ. சந்திரன்

19. கோவைத் தேயிலைத் தோட்டங்களின் வரலாறும் வாழ்க்கைச்சூழலும் 106
முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்

20. தமிழ் மலையாள வினைவெச்சங்கள் 112
முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி

21. உ.வே.சா.-வின் "என் சரித்திரம்" சித்தரிக்கும் கல்விச் சூழல் 117
வெ. இரமேஷ் மற்றும் முனைவர் இரா. சிவகுமார்

22. திருக்குறள் காட்டும் "காமம்" 123
முனைவர் அ. நந்தினி

# உ.வே.சா.-வின் "என் சரித்திரம்" சித்தரிக்கும் கல்விச் சூழல்

**வெ. இரமேஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப/நே.)
முதுகலைத் தமிழாய்வுத் துறை
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (த), வேலூர்

**முனைவர் இரா. சிவகுமார்**
நெறியாளர், உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத் துறை
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (த), வேலூர்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

"கல்வியிற் சிறந்த தமிழ்நாடு" என்று மகாகவி பாரதி தமிழகத்தின் கல்விப் புலமையைப் பாராட்டியுள்ளார். தொன்மையான இலக்கிய, இலக்கணத் தொகுதிகளைப் பெற்றுச் சிறந்த தமிழ்நாட்டில் கல்விச் சூழல் பல்வேறு கால மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. முறை சார்ந்த கல்வி என்பதே ஐரோப்பியர்களின் காலத்துக்குப் பிறகுதான் தமிழ்நாட்டுக்கு அறிமுகமாகியுள்ளது. "பள்ளி" என்ற சொல் சமணத் துறவிகளின் உறைவிடத்தைக் குறிப்பதாகும். அங்குதான் மருத்துவம் முதலானவை கற்பிக்கப்பட்டுள்ளன. சமணத் துறவிகள் தாங்கள் தங்கித் தவமிருக்கும் குகைகள் மலையிடங்களை நாடி வரும் மாணவர்களுக்கு குகைகளை ஒட்டி அமைக்கப்பட்ட கூடங்களில் அமர்த்தி கல்வியளித்தனர். நாளடைவில் அவ்விடங்கள் பள்ளிக்கூடங்கள் என்னும் பெயரைப் பெற்றன. இன்றளவிலும் கல்வி கற்குமிடங்கள் பள்ளிக்கூடங்கள், பள்ளிச்சாலைகள் என்று வழங்கி வருதல் சமணர்கள் தமிழ்நாட்டில் வழங்கிய கல்விக்கொடைக்குச் சான்றாகும். பிற்காலத்தில் கற்றல் செயல்பாடு நிகழும் இடத்தைப் "பள்ளி" என்று குறிக்கும் வழக்கம் உருவாயிற்று.

இந்திய விடுதலைக்கு முன் கல்விச் செயல்பாடு பரவலாகத் தொடங்கியது. மரபார்ந்த கல்விமுறை நீடித்துவந்த அதே கால கட்டத்தில் ஆங்கிலேயரின் புதிய கல்விமுறையும் தமிழ்நாட்டில் செயல்பாட்டில் இருந்தது. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ்நாட்டில் கல்விச் சூழலை உ.வே. சாமிநாதையர் மிகவும் சுவைபட எழுதியுள்ளார். அவரது என் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அக்காலகட்டத்துக் கல்விச்சூழலைத் தொகுத்துரைக்கிறது இக்கட்டுரை.

**கல்வி முறைகள்**

ஆங்கிலேயர்கள் காலத்தில் அவர்களால் தொடங்கப்பட்ட கல்விச்சாலைகள் இயங்கி வந்தன. ஆங்கிலேயர் காலத்துக்கு முந்தைய கல்விநிலையைக் குறித்து அறிஞர் க.ப. அறவாணன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"கி.பி. 1567க்கு முன்பு தமிழ்நாட்டில் கல்விப்பயிற்சிஎவ்வாறுஇருந்தது?குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருக்கவில்லை என்றே கருதவேண்டி உள்ளது. கல்வியின் அருமை பெருமை பற்றிப் புறநானூறு, திருக்குறள், நாலடியார், பழமொழி முதலான நூல்களில் சொல்லப்பட்டிருந்தாலும் கல்வியைப் பொது மக்களுக்குப் பயிற்றுவித்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை" (தமிழர் கல்விச் சிந்தனைகள்; ப.133-134) என்கிறார்.

ஆங்கிலேயர்தொடக்கத்தில்இந்தியர்களின் கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. எனவே தமிழ்நாட்டில் ஏற்கனவே நிகழ்ந்து வந்த பாரம்பரியக் கல்விமுறையே நிலவி வந்தது. ஆங்கிலேயர்களும் இந்தியர்களின் கல்விக் கோரிக்கைக்கு முதலில் செவி சாய்க்கவில்லை. "ஒரு நூற்றாண்டிற்கு முன்பாகவே, தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக்க மத்திய சட்டமன்றத்தில் கோபாலகிருஷ்ண கோகலே ஒரு மசோதா கொணர்ந்து, அதனைச் செயல்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் பெயரளவிற்கு ரூ. ஒரு லட்சம் ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். நம்மை ஆண்ட பிரிட்டிஷ் அரசு அதனைக் கொள்கை அளவில்கூட ஏற்க மறுத்தது" (தமிழக பள்ளிக் கல்வி; ப.09) என்கிறார் ச.சீ. இராசகோபாலன்.

பேராசிரியர் எஸ். சந்தானம், கிழக்கிந்திய கம்பெனி நம் நாட்டில் அடியெடுத்து வைத்து நிலைபெற முயன்ற தொடக்க நாட்களில் அது இந்தியக் கல்வியில் போதிய ஆர்வம் காட்டவில்லை. 1698 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் முதன் முறையாக அதனைக் கல்விப் பணியில் ஈடுப்படுத்தியது. (கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும், ப.426) மரபார்ந்த கல்வி நிறுவனச் செயல்பாடும் அப்போது அற்றுப் போகவில்லை என்பதை உ.வே.சா. எடுத்துரைக்கிறார்.

பெற்றோரிடம் கற்றல், குருகுலக் கல்வி, திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி, மடத்துக் கல்வி உள்ளிட்ட கல்வி முறைகள் வழக்கத்திலிருந்தன. உ.வே. சாமிநாதையர் மேற்குறித்த நான்கு வகையான கல்வி முறைகளிலும் ஈடுபட்டுக் கற்றமையை அவரது என் சரித்திரம் வெளிப்படுத்துகிறது. உ.வே.சா.வின் தந்தையார் அவரது தந்தையாரிடம் தமிழும் சமஸ்கிருதமும் கற்றமையையும் தனது தாயாரிடமிருந்து சங்கீதம் கற்றமையையும் அவர் வெளிப்படுத்துகிறார்.

**அரிச்சுவடி, எண்சுவடி**

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**
**- கொன்றைவேந்தன், 7.**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு**
**- குறள் 392**

வள்ளவரும், ஔவையும் சொன்னது போல,கல்விச்செயற்பாட்டில்அடியெடுத்து வைக்கும் குழந்தைகளுக்கு முதலில் கற்பிக்கப்படுவது அரிச்சுவடி ஆகும். அதாவது எழுத்துக்கள் கற்பிக்கப்படுவதே தொடக்கநிலைக் கல்வியாகும். எழுத்துக்களை உச்சரித்தலும், மனனம் செய்வதும் இச்செயல்பாட்டின் படிநிலைகள். எண் சுவடி என்பது எண்களைக் கற்றல் ஆகும். இச்செயல்பாட்டில் எண்களின் வரிவடி வத்தையும் ஒலி வடிவத்தையும் அறிதல் முதன்மையானதாகும். அரிச்சுவடியையும்

எண்சுவடியையும் கற்றபிறகே ஏட்டில் எழுதப் பயிற்சி அளிக்கப்படுவது வழக்கம்.

**மணலில் எழுதுதல்**

காகிதம், சிலேட் போன்ற கற்றல் கருவிகள் கல்விச் சாலைகளுக்கு வந்திராத காலத்தில் மாணவர்கள் எழுத்துக்களை எழுதக் கற்பது என்பது எளிமையான செயல்பாடாக இருக்கவில்லை. மணலினைக் கொட்டிப் பரப்பி, அதில் எழுத்துக்களை எழுதிப் பழகும் முறையே வழக்கத்தில் இருந்திருக்கிறது. அதிகாலையில் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள், தாங்கள் முதல்நாள் மனப்பாடம் செய்தவற்றை ஒப்புவித்தபிறகு, காலை ஆறுமணிக்கு மேல் குளம், ஆறு முதலான நீர்நிலைகளுக்குச் சென்று தங்களைச் சுத்தப்படுத்திக் கொண்டு, தங்களின் துணிகளில் மணலை அள்ளி வந்து பள்ளியில் பரப்பி, அதன்மீது எழுத்துக்களை எழுதுவார்கள். ஒவ்வொருநாளும் இவ்வாறு மணலினை மாற்றும் வழக்கம் இருந்ததாக (ப.53-54) உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுகிறார்.

**சுவடித்தூக்கு, முறைசொல்லுதல்**

கற்றல் கருவியாக அக்காலத்திலிருந்த ஓலைச்சுவடிகளைத் தூக்கிச் செல்லும் முறைமைக்குச் "சுவடித்தூக்கு" என்றுபெயர். "சுவடிகளையெல்லாம் வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த பலகைக்குச் சுவடித்தூக்கென்று பெயர். அந்தத் தூக்கு ஒருவகை உறியைப் போல இருக்கும். தூக்கைப் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் மாட்டிவிட்டுப் பிள்ளைகள் முறைப்படி இருந்து முதல் நாள் நடந்த பாடங்களைப் பாராமல் ஒப்புவிக்க வேண்டும். அதற்கு முறை சொல்லுதல் என்று பெயர்" (ப.53) என்று குறிப்பிடுகிறார் உ.வே.சா. அவ்வாறு ஒப்புவிக்கப்படும் பாடங்களை ஆசிரியர், வீட்டிற்குள் படுத்தபடியே கேட்டுக் கொண்டிருப்பார். ஆசிரியரை எதிர்பாராமல் பிள்ளைகள் பாடத்தை ஒப்புவிக்க வேண்டும். இச்செயல்பாடு ஆசிரியரின் வீட்டுத் திண்ணையிலேயே நடைபெறும். ஆதலால் இவ்வகையிலான பள்ளிகளுக்குத் "திண்ணைப் பள்ளிக்கூடம்" என்று பெயர்.

**அடிக்கிற வழக்கம்**

திண்ணைப் பள்ளிக்கூடத்தின் கல்வி கற்பிக்கும் முறையில் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தது கோல்கொண்டு அடித்தலின் வழியாக மாணவர்களை அச்சுறுத்தும் வழமையாகும். ஆசிரியரின் சொல்லுக்குக் கீழ்ப்படியாத, பாடங்களை ஒழுங்காகப் படிக்காத மாணவர்கள் ஆசிரியரால் அடிக்கப்பட்டனர். பள்ளிக்குத் தாமதமாக வரும் மாணவர்கள் மட்டுமல்லாமல், முதலில் வந்தவனைத் தவிர மற்ற எல்லோருக்கும் அடி கிடைக்கும். பள்ளிக்கு முதலில் வருபவனுக்கு "வேத்தான்" என்று பெயர். "வேற்றான்" அதாவது மற்றவர்களிலிருந்து வேறுபட்டவன் என்னும் பொருளில் இச்சொல் வழங்கப்பட்டிருக்கலாம் என்று உ.வே.சா. குறிப்பிடுகிறார். முதலில் வந்த வேத்தானின் கையில் ஆசிரியர், பிரம்பால் தடவி விடுவார். இரண்டாம் பையனை மெல்ல அடிப்பார். வரவர அடி அதிகமாகும். பலமாகவும் விழும் (ப.54) என்கிறார் உ.வே.சா.

காலை உணவுக்கு "பழையது" உண்ண வீட்டுக்கு அனுப்பும்போஅனைவரையுமே அடித்து அனுப்பும் வழக்கம் இருந்தமையை உ.வே.சா. எடுத்துக்காட்டுகிறார். "பழைய சோற்று ருசியில் பள்ளிக்கூட ஞாபகம் மறக்கக் கூடாதென்பதற்காக அங்ஙனம் செய்வார் போலும்" (ப.53) என்கிறார் அவர்.

"இவ்வாறு மாணாக்கர்கள் மனத்தில் அச்சத்தை உண்டாக்கிக் கல்வி புகட்டும் இந்த வழக்கம் இக்காலத்தில் யாவராலும்

கண்டிக்கப்படுகிறது. அக்காலத்தில் பெரும்பாலான திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இந்த முறையில்தான் நிகழ்ந்து வந்தன. அடிக்குப் பயந்தாவது பையன் படித்து வந்தான். அவனுக்குப் பல விஷயங்கள் மனனம் ஆகும்" (ப.57) என்று அச்சுறுத் தலின் அன்றைய தேவையை மென்மையாக வலியுறுத்துகிறார் உ.வே.சா.

### சட்டாம்பிள்ளை

மாணவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து மாணவர் தலைவராக நியமிக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தமையை உ.வே.சா. எடுத்துக்காட்டுகிறார். அவ்வாறு மாணவர் தலைவராக நியமிக்கப்படுபவர் "சட்டாம் பிள்ளை" என்று அழைக்கப்பட்டார்.

"பிள்ளைகளுக்குள்ளே கெட்டிக்கார னாகவும் பலசாலியாகவும் இருப்பவனை உபாத்தியாயர் சட்டாம்பிள்ளையாக நியமிப் பார். அவன் புத்திசாலியாக இராவிட் டாலும் பலசாலியாக இருக்க வேண்டியது அவசியம். உபாத்தியாயருக்குப் பிரதிநிதியாகப் பிள்ளைகளை அடக்கியாள்வதும் பாடம் ஒப்பிக்கக்கேட்பதும் அவன் வேலைகள். அவனிடம் எல்லோரும் அடங்கி நடக்க வேண்டும். சில பிள்ளைகள் அவனுக்கு வேண்டியதின்பண்டங்களைக் கொடுத்துத் தம் வசப்படுத்தி உபாத்தியாயருடைய பிரியத்தையும் அவன் மூலமாகச் சம்பாதிப்பார்கள். சில சமயங்களில் உபாத்தியாயரது கடுமையைக் காட்டிலும் சட்டாம் பிள்ளையின் கடுமை அதிகமாக இருக்கும்" (53-54) என்கிறார் அவர்.

### திண்ணைப் பள்ளிக்கூட நேர முறைமை

அதிகாலை ஐந்து மணிக்கே திண்ணைப் பள்ளிக்கூடம் தொடங்கிவிடும். ஆறுமணி வரை முந்தைய பாடங்களை ஒப்புவிக்க வேண்டும். ஆறுமணிக்கு மேல் வாய்க்கால் அல்லது குளத்துக்குச் சென்று தந்த சுத்தி செய்து வர வேண்டும். மணலை அள்ளி வந்து பரப்பி எழுத்துக்களை எழுதிப் பழக வேண்டும். ஒன்பது மணிக்குப் பழைய அமுது உண்ணுவதற்காக மாணவர்கள் தங்களின் இல்லத்துக் அனுப்பப்படுவார்கள். பிற்பகல் உணவுக்கான இடைவேளை பன்னிரண்டு மணிக்கு விடப்படும். பிறகு மீண்டும் மூன்று மணிக்குப் பாடம் தொடங்கப்படும். இரவு ஏழுமணி வரையிலும்கூடப் பள்ளிக்கூடம் நடைபெறும். இவ்வாறு அதிகாலை ஐந்து மணியிலிருந்து மாலை ஏழு மணிவரையிலும் கற்பித்தல் ஒரு தொடர்ச் செயல்பாடாக இருந்தமையை உ.வே.சா. எடுத்துக்காட்டுகிறார்.

### சுவடி தயாரித்தல்

பெரியவர்களால் தயாரித்துத் தரப்பட்ட ஓலைகளில் ஆசிரியரின் வழிகாட்டுதலின் படி மாணவர்கள் எழுதக் கற்பார்கள். ஆசிரியர் ஒரு ஓலையில் எழுதித்தர, மாணவர்களை அதைப்பார்த்துத் தங்களது ஓலைகளில் எழுதுவார்கள். ஆசிரியர்கள் எழுதித்தரும் மூல ஓலைக்குச் "சட்டம்" என்று பெயர்.

தாங்கள் பயன்படுத்தும் ஓலைச் சுவடிகளை பதப்படுத்திப் படிப்பதற்குத் தகுந்ததாக ஆக்கிச் சொல்லும் செயல்பாடு மிகவும் இன்றியமையாததாகும். அச்செயல் பாட்டினை மிகவும் சுவைபட விளக்குகிறார் உ.வே.சா.

"ஏட்டுச் சுவடிகளில் மஞ்சள், ஊமத்தையிலைச் சாறு, வசம்புக்கரி முதலிய வற்றைத் தடவிப் படிப்பது வழக்கம். எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதற்கும் பூச்சிகள் வராமல் இருப்பதற்கும் அவ்வாறு செய்வார்கள். ஏட்டுச் சுவடிகளுக்குக் குறிப்பிட்ட அளவு ஒன்றும் இல்லை. வெவ்வேறு அளவில் அவை இருக்கும். சுவடிகளில் ஒற்றைத் துவாரம் இருக்கும்.

ஒரு நூற்கயிற்றைக் கிளிமூக்கு என்ற ஒன்றில் முடிந்து சுவடியின் துவாரத்தின் வழியே செலுத்தி அதைக் கட்டுவார்கள். பனையோலையை நாம்போடு சேர்த்துச் செறிவு துண்டுகளாக நறுக்கிக் கிளி மூக்குகளாக உபயோகப்படுத்துவார்கள். கிளிமூக்கிற்குப் பதிலாகப் பொத்தானையோ, துவாரம் பண்ணின செப்புக் காசையோ, சோழியையோ முடிவதும் உண்டு" (ப.55) என்று அவர் எடுத்துக்காட்டுகிறார்.

**எழுத்தாணி வகைகள்**

ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்குப் பயன் படுத்தப்படுவது எழுத்தாணி ஆகும். அவ்வெழுத் தாணிகளில் பல வகைகள் இருந்தமையை உ.வே.சா. பதிவு செய்கிறார். "வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி, மடக்கெழுத்தாணி எனப் பல வகைகள் இருந்தன. வாரெழுத்தாணிக்குப் பனையோலையினாலே உறைசெய்து அதற்குள் செருகி வைப்பார்கள். மடக்கெழுத்தாணிக்குப் பிடி இருக்கும். மடக்கிக் கொள்ளலாம். அந்தப்பிடி மரத்தினாலோ தந்தத்தினாலோ மாட்டுக் கொம்பினாலோ அமைக்கப்படும்" (ப.56) என்கிறார்.

**ஆசிரியர் ஊதியம்**

தமிழகத்தில் கல்வி நிறுவன மயமாக ஆகும் வரையிலான காலம்வரை கல்வி பெரும்பாலும் திண்ணைக் கல்வியாகவே இருந்தது. அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஏறத்தாழ சுயதொழில் போன்ற தொன்றாகவே கல்வித் தொழிலை மேற்கொண்டு வந்தார் எனலாம்.

பள்ளிக்கு வரும் மாணவர்கள் தினந் தோறும் ஆசிரியருக்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். விறகு, வரட்டி, காய், பழம் என ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டுவந்து ஆசிரியருக்குக் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. இதைத் தவிர, ஒவ்வொரு மாணவனும் மாதம் கால் ரூபாய் ஆசிரியருக்குச் சம்பளமாக அளிப்பர்.

"நவராத்திரி காலங்களில் உபாத்தியா யருக்கு ஒரு வகையான வரும்படி உண்டு. அந்த உத்ஸவத்தை "மானம்பூ" என்று சொல் வார்கள். மகா நோன்பு என்றும் சொல்வே அந்த உருவத்தை அடைந்தது. அக்காலத்தில் பிள்ளைகள் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வந்து பாட்டுப்பாடுவார்கள். கோலாட்டம் போடுவார்கள். அதற்கெனவே தனியே பாட்டுக்கள் உண்டு. ஒவ்வொருவர் வீட்டுக்கும் பிள்ளைகளை அழைத்துச் சென்று பாடச்செய்வது உபாத்தியாயர் வழக்கம். வெளியூருக்கும் அழைத்துச் செல்வது உண்டு. அவரவர்கள் தங்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி பணம் தருவார்கள். இந்தப் பணம் முழுவதையும் உபாத்தியாயர் எடுத்துக் கொள்வார். மானம்பூ வருவாயினால்தான் உபாத்தியாயர்கள் தங்கள் வீட்டுக் கல்யாணம் முதலிய காரியங்களைச் சிறப்பாக நடத்துவார்கள்" (ப.56-57) என்று எடுத்துக்காட்டுகிறார் உ.வே.சா.

இவ்வாறு மாணவர்களே ஆசிரியருக்கு ஊதியம் அளித்துக் கற்கும் வழமை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இருந்தமையை உ.வே.சா. வெளிப்படுத்துகிறார்.

> **"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
> **பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"**
> **(புறம்.183)**

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. இவ்வழமை தமிழகத்தைப் பொருத்தவரை, கல்வி நிறுவன மயமாக மாறும் வரையிலும் நீடித்தமையை உ.வே.சா. தன்னுடைய எழுத்தில் பதிவு செய்திருப்பது கருத்தில் கொள்ளத்தக்கது ஆகும்.

## முடிவுரை

1. ஆங்கிலேயர் காலத்தில் கல்வி என்பது நிறுவனப்படுத்தப்படும் வரை பல்வேறு விதமான கல்வி முறைகள் வழக்கத்தில் இருந்தமையை உ.வே.சா.வின் "என் சரித்திரம்" எடுத்துரைக்கிறது.
2. கல்வியின் தொடக்கநிலைச் செயல்பாடுகளாக அரிச்சுவடி கற்றலும் எண்ணும் எழுத்தும் கற்றலும் அமைகின்றன.
3. எழுத்துக்களை மணலில் எழுதிப் பழகும் வழமை அக்காலத்தில் இருந்துள்ளது.
4. திண்ணைப்பள்ளிக்கூடத்துக்கு வரும் மாணவர்கள் சுவடிகளை ஒரு தூக்கில் எடுத்து வருவார்கள். அது சுவடித் தூக்கு எனப்பட்டது. ஒவ்வொரு நாள் காலையிலும் முந்தைய பாடங்களை மனப்பாடமாக ஒப்புவிக்கும் "முறை சொல்லுதல்" என்னும் முறைமை வழக்கிலிருந்துள்ளது.
5. மாணவர்களை ஒழுங்குபடுத்துவது என்ற நோக்கில் கோல் கொண்டு ஆசிரியர் அடிக்கும் வழக்கம் மிகுதியாக இருந்துள்ளது.
6. சுவடிகளை மாணவர்கள் மெருகேற்றுவதற்கான பணிகளைச் செய்துள்ளனர். சுவடிகளை அலங்கரித்துள்ளனர்.
7. ஆசிரியர் தனக்கான பொருளாதாரத் தேவைகளுக்கு முழுமையாகக் கற்கும் மாணவர்களைச் சார்ந்தே இருந்திருக்கிறார்.

இவ்வாறான கல்விச் செயல்பாடுகள் ஆங்கிலேயர் காலத்திலேயே பெரும் மாற்றங்களை சந்தித்தமையை உ.வே.சா. தனது "என் சரித்திரம்" நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

## கருவி நூல்கள்

1. புறநானூறு, நியூ செஞ்சுரி பதிப்பகம், 2004.
2. குறள், நியூ செஞ்சுரி பதிப்பகம், 2004.
3. அறவாணன் க.ப. "தமிழர் கல்விச் சிந்தனைகள்", தமிழ்க்கோட்டம், சென்னை, 2015.
4. இராசகோபாலன், ச.சீ., தமிழகப் பள்ளிக் கல்வி, புக் பார் சில்ரன், சென்னை, 2007.
5. சாமிநாதையர், உ.வே., "என் சரித்திரம்", டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2017.
6. பேராசிரியர் எஸ். சந்தானம், கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும், சாந்தா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2006.